பத்திரிக்கை செய்தி

லஞ்சம் பெற்ற வழக்கில் முன்னாள் சமூகநலத்துறை ஊரகநல அலுவலருக்கு 3 ஆண்டு கடுங்காவல் சிறை,

புகார்தாரர் கமலீஸ்வரி, வள்ளுவர் வீதி, ஆவினாசி, திருப்பூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரருக்கு ஒரு மகளும் ஒரு மகனும் உள்ளனர். புகார்தாரர் தன்னுடைய மகளுக்கு கடந்த 10.08.2016ம் தேதி தமிழக அரசால் வழகப்படும் மூவலூர் ராமாமீர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டத்தின் கீழ் உதவி பெற ஆன்லைன் மூலமாக விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க திருமதி ஆறுமுகத்தாய், சமூகநலத்துறை ஊரக நல அலுவலர், தனக்கு லஞ்சமாக ரூ.2,000/- கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருப்பூர் பிரிவில் புகார் கொடுத்துள்ளார். புகார் மீது மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு கடந்த 07.11.2016ந் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திருமதி ஆறுமுகத்தாய் புகார்தாரரிடமிருந்து லஞ்சபணம் ரூ.2,000/-கேட்டு பெற்ற போது கைது செய்யப்பட்டார். இவ்வழக்கில் ஆறுமுகத்தாய் மீது திருப்பூர் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்ற வந்த வழக்கில் இன்று 22.05.2025-ம் தேதி ஆறுமுகத்தாய்க்கு ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 7ள் கீழ் 3 வருடம் கடுங்காவல் சிறை தண்டணையுடன் ரூ.2.000/- அபராதமும், ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 13 (2) r/w 13 (1)(d)ன் கீழ் 3 வருட கடுங்காவல் சிறை தண்டணையுடன் ரூ.2.000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.